51

உ

ஓம் சக்தி துணை.

ஜெய்ஹிந்த்! வந்தேமாதரம்!!

சுதந்திரப் பாடல்கள்.

சோழபாண்டி தமிழகம்

தலைமை ஆசிரியர், உயர் திரு.

N. S. வெங்கடேஸ்வர அய்யர்

அவர்களால் இயற்றப்பட்டது.

ரஸ், மன்னர்குடி.

1948. [விலை 1 அணை

MADRAS

0-/1E
N48
17578

பாரதத்தாய் வணக்கம்.

ஸ்ரீ சிவசண்முகவேலனே—என்ற மெட்டு.

1 ஸ்ரீ ஜெய பாரத தேவியே
செந்தமிழ்த் தாயே சஞ்சீவியே
வாசங் கமழ் மலர் தூவியே
மாணடி பூசித்தோம் மேவியே

2 சகல புவனமா ராணியே
சரணடைந்தோம் சூல பாணியே
திகழ்பெறும் சங்சித வாணியே
செந்திரு மாது கல்யாணியே

3 புத்திவித்தை யருள் ஈஸ்வரி
புனிதரை யீன்ற மனோகரி
சத்தியரூப குணகரி — ஆதி
சக்தியே தீன தயாபரி

4 கல்வி, பண்பு, செல்வ மிலங்கவே
கைத்தொழில் வேளாண்மை தழைங்கவே
கல்லாமை, இன்மை, நோய் நீங்கவே
கண்பாரும் மேபின்பம் ஓங்கவே

தேசியக்கொடி

அம்மமாரே. ஆச்சிமாரே—என்ற மெட்டு

1 சுதந்திரக் கொடி பறக்குதுபார்
சுகம் பெற வழிபிறக்குது பார்
சுயவர சுதய மானது பார்
அயலரச கன்று போனது பார் (சு)

சகல வளமும் திகழும் பாரதத்தாய்மணிக்கொடியே
ஜகமுழுவதும் புகழும் காந்தி திருமொழிப்படியே
மகிழ்வுடன் பணிந்து போற்றுவோம்
வணங்கியே உயர ஏற்றுவோம் (சு)

2 அடிமை மிடிமை மடமைப் பிணிகளகற்றிடுங்கொடியே
அஹிம்சை சமத்வம் சாந்த மன்பு அளித்திடுங்கொடி
அழகிய மூவர்ணக் கொடியே [யே
அசோக சக் ராயுதக் கொடியே (சு)

மகாத்மா காந்தி துதி

மாமயிலேறிய கூர்வடிவேலா---என்ற மெட்டு.

1 காந்தி மகான் மொழி ஏந்திடில் சோகம்
ஏந்திடில் சோகமும் தீர்ந்திடும் ரோகமும் (கா)

சாந்த குணாளன் சமரஸ லோலன்
இந்திய பாலன் இனிய சுசீலன் (கா)

2 சாத்வீக வீரன் சத்யாவதாரன்
ஆத்மீக தீரன் அருளலங் காரன் (கா)

3 ஏந்தல் சீர் யோகி இணையற்ற த்யாகி
தேர்ந் தவிவேகி திகழ்மதி யூகி (கா)

4 பக்தியை யூட்டி பயமதை யோட்டி
சக்தியைக் காட்டி ஜயம் பெற்றூர் நாட்டில் (கா)

கைராட்டினம்.

ஆடுவோமே பள்ளு பாடுவோமே-என்ற மெட்டு.

சுற்றுவோமே ராட்டை சுற்றுவோமே தினம்
சுகம்பெற வழியென்றே தாயகைராட்டினம் (சு)

1 சுய ஆட்சி வந்ததென்ற சுற்றுவோமே நமக்கு
சுதந்திரம் தந்ததென்ற சுற்றுவோமே
சுயதேவை பூர்த்தி திட்டம் வெற்றியாமே இனி
செல்வம் பெருகுமென்ற சுற்றுவோமே. (சு)

2 ஒற்றுமை ஓங்குமென்ற சுற்றுவோமே காந்தி
ஓதும் தத்துவமுணர்ந்தே சுற்றுவோமே
வேற்றுமை நீங்குமென்ற சுற்றுவோமே நாட்டின்
வறுமையகலுமென்ற சுற்றுவோமே. (சு)

3 பஞ்சடித்து சுத்தம்செய்து பட்டை போட்டு ராட்டில்
பண்புடனே நாமே கையால் நூற்ற நூலால்
நம் சகோதரர் கையால் நெய்த ஆடை மிக்க
நன்மையென்ற யணிந்து சுற்றுவோமே. (சு)

4 சோம்பலாக வீண் பொழுது போக்கமாட்டோம் மனம்
சோர்ந்திடாது நித்தம் முக்கால் மணி நூற்போம்
நம்பி மகான் காந்தி நெறி கடைப்பிடிப்போம் பயன்
நல்குந்தொழில் மூலாதாரக் கல்வி வளர்ப்போம் (சு)

5 நூற்பவரெல்லோருங் கத ராணிய வேண்டும் நாளும்
நற்கதராணிவோரெல்லாம் நூற்கவேண்டும்
கற்பகத் தருவேயென கருதுகாமே புகழ்
கைராட்டினை எல்லோரும் சுற்றுவோமே. (சு)

கதர் அணிதல்.

பஜனை செய்வோம் கண்ணன் நாமம் என்ற மெட்டு.

கதருடையே அணிவோமே சுத்த
கதருடையே அணிவோமே.
காந்தி மகானருள் கைராட்டிலே தினம்
கனிந்து நூல் நூற்போமே. (கத)

சுதந்திர மடைந்தோம் தீமைகளகல
சுதேசத் தொழில் வளர்ப்போமே
இதன் புகழ் தெரியா திதுவரை நாமே
இதர நாட்டுடை தரித்தோமே. (கத)

பசிப்பிணி நீக்கும் புகழ்மிக ஆக்கும்
பொருளாதார நிலை காக்கும்
விசனம் நமக்கிலை வீரமே திகழும்
வெற்றியே ஓங்கிடும் யார்க்கும். (கத)

மது விலக்கு

ரத்தன் டாக்கி வர்ணமெட்டு.

1 பாழும் மதுபானத்தினாலே — இதுகாள்வரை
பட்டதுயர் சோமினி சேமிலே
தம்-வாழ்வினை யுயர்த்துங் காந்தி
மாமொழியே நாடுவோம்
வாதை தந்த கள்ளரக்கன்
மாண்டானென்று பாடுவோம்
மதுவிலக்கு சட்டமே நன்மை
வாழ்க்கையில் சேமன்மை
மக்கள வறுமை மாற்றிடு முண்மை

2 காசு சேருஞ் ஆடைக ளாகாப்பொருள் வாங்கவே
நேசமாய்க் குழந்தைகட்கு
தேசக்கல்வி ஓங்கவே
ஈசனை வணங்கிடுவோமே — மதுபானமே
ஈனமான நஞ்சறிந்தோமே (பாழும்)

நூல் சிட்டத்தின் அளவு.

வாய்ப்பாடு.

4 அடி. = 1 தார்
80 தார் = 1 கண்ணி (குஞ்சம்)
8 கண்ணி = 1 சிட்டம்

---

1 தார் = $1\frac{1}{3}$ கெஜம்.

தேச வாழ்த்து.

மோகனம்—தாளம்—ஏகம்.

வாழ்க வாழ்க இந்திய மாதேச மென்றும் வாழ்கமே
வானளாவி தேசிய மூவர்ணக் கொடி வாழ்கமே
இந்தியக் குடியாசு இன்பம்பெற்றே வாழ்கமே
ஈடிலா முதலமைச்சரான ஜவஹர் வாழ்கமே
காந்தி மார்க்கம் நின்றிடுமா காண ஆட்சி வாழ்கமே
கல்விச் செல்வமே வளர்க்கும் கணக்காயர் வாழ்கமே.

தாய்மொழி வாழ்த்து.

தாயின் மேலாணை என்ற மெட்டிலும்
ஏற்ற வர்ண மெட்டுகளிலும் பாடவும்.

1 தாய்மொழியாம் தெய்வத் தமிழ்மொழி வாழ்க
தமிழர்கள் வாழியவே
தேனினுமினியத் தமிழ்க்கலை வாழ்க
தமிழகம் வாழியவே

2 வாய்மையும் தூய்மையும் ஒற்றுமையும் அன்பும்
வண்மையும் ஓங்கிடவே
வறுமையும் மடமையும் பூசலும் நீங்கியே
மங்களம் பொங்கிடவே (தா)

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.
சுபம்.

பாரதி பிரஸ், மன்னார்குடி. P. I. C. 161. Or. 7923. C. 2000.